மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் பஸ் ஸ்பிப் ஓவர் செய்து கொண்டிருக்கின்ற பிரச்னை இருக்கிறது. இயக்குநர் அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். 10 நாட்களுக்குள் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

* 584 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether porters have been licenced at the long but routes terminus for the convenience of passengers in Madras City?

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். நீள் தொலைப் பேருந்து விரைவு வண்டிகள் நிற்கும் முக்கியமான பேருந்து நிலையங்களில் பயணிகளின் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிமம் பெற்ற சுமைக் கூலிகளைத் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமர்த்தியுள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற உரிமம் பெற்ற சுமைக்கூலிகள் மணங்குக்கு இவ்வளவுதான் காசு பெற வேண்டுமென்ற அட்டவணையிலிருந்தும்கூட சாதாரண மக்களிடத்தில் வற்புறுத்தி அதிகமாகக் கூலி பெறுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் காவலரை நியமித்து ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாலுக்குக் காவல் பூனை என்ற மாதிரி சொல்கிறார்கள். ஏற்கனவே 50 காசு என்று நிர்ணயித்து இருக்கிறோம். குறிப்பிட்ட புகார் வந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு அதுபற்றிக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 585 அமைச்சரின் கோரிக்கைப்படி ஒற்றிவைக்கப்படுகிறது.

Sri Saranatha Perumal temple at Tirucherai.

* 586 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether it is a fact that a Trustee has been appointed for Sri Saranatha Perumal temple at Tirucherai in Kumbakonam taluk by the Commissioner, Hindu Religious and Charitable Endowments in the month of March, 1969; and

(b) whether the said trustee was an existing lessee of certain portions of lands of that temple?

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: (அ) ஆம். இந்து சமய அறக் கட்டளை ஆணையாளரின் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதி நாளிட்ட ஆணையின்படி, 3 ஆண்டுக் காலத்திற்கு கோயிலின் அறங்காவலராக திரு டி. எஸ். கோவிந்தராஜன் நியமிக்கப்பட்டார்.

(இ) மேற்சொன்ன அறங்காவலரின் நியமன நாளின்போது நிலம் தொடர்ந்து குத்தகையில் இல்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அந்த டிரஸ்டியானவர் நியமனம் செய்யப்படும் காலத்திலே அவர்களுக்கு கோயிலுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த நபர் கோயிலிலிருந்து நிலத்தைக் குத்தகைக்கெடுத்து அனுபவித்துக் கொண்டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. கோயில் நிர்வாகத்தினருடன் ஒப்பந்தம் செய்த லீஸானது கோயிலின் சம்மதத்தின்பேரில் மாற்றப்பட்டிருக்கிறதா? இப்பொழுது யார் பேரில் இருக்கிறது என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அந்த கோவிந்தராஜன் என்பவர் எட்டு செண்ட் நிலத்தை ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து இருக்கிறார். அந்த குத்தகை 29—3—68 டோடு முடிந்து விட்டது. அதன்பிறகு அவர்கள் பேரிலே குத்தகைக்கு எடுக்கப்பட் டிருக்கிறது. 10 செண்ட் நிலம் தன்னுடைய சொந்தப் பெயரில் குத்த கைக்கு எடுக்கப்பட்டு 9—3—68 வரையில் அது இருந்திருக்கிறது. ஆனால் அவர் குத்தகைத் தொகை தரவேண்டியதில்லை. தவறுதலாக அவருடைய பெயரிலே டிமாண்டிலே பாக்கியென்று போட்டிருக்கிறார்கள். கோவிந்த ராஜன் என்பவருடைய தகப்பனாரிடமிருந்த குத்தகை 13—11—68 அன்று பாகப் பிரிவினை செய்யப்பட்டு தம்பி பேருக்குப் பாகப் பிரிவினை செய்து ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. 22—3—69 அன்றுதான் அவர் அறங் காவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அன்றைய தேதியில் அவர் பெயரில் எந்தவிதமான குத்தகையும் இல்லையென்று தெரிகிறது. ஆகையினால் அவர் அறங்காவலராக நியமிக்கப்பட்டதில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Brothel cases

* 587 *Q.*—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of house brothel cases booked by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras in East Abiramapuram under the suppression of Immoral Traffic Act from the date of his assuming charge of his present post till 27th November 1969?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: 1 (ஒன்று)

Thiru T. MARTIN : Sir, being aware of the existing of high-class brothels in East Abhiramapuram and Raja Annamalai-puram, the Inspector of Vigilance, Thiru Rajaram who was working under the Assistant Commissioner of Vigilance,, conducted some raids or attempted to conduct raids in East Abhiramapuram in August, September and October 1969. May I know from the Hon. Minister whether he has booked any cases during this period or if his attempt has been foiled, may I know the reasons for the same? முற் பக[ல்] 10-00

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, ஹவுஸ் ப்ராத்தல் கேஸ்களைப் பொருத்தவரை இப்போது இருக்கக் கூடிய அசிஸ்டெண்ட் கமிஷனர் அவர்கள் பதவி ஏற்ற தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 33 கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அபிராமபுரத்தில் ஒரு கேஸ் கண்டுபிடிக் கப்பட்டு அது சரியானபடி ப்ரூவ் ஆகவில்லை என்று வித்ட்ரா செய்யப் பட்டிருக்கிறது. 33 கேஸ்களில் 8 கேஸ்கள் கன்விக்ஷன் கொடுக்கப்பட் டிருக்கிறது ; 6 கேஸ்கள் அக்விடெட் ; 2 கேஸ்கள் வித்ட்ரா செய்யப் பட்டிருக்கின்றன. ஒரு கேஸ் ட்ராப் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : என்னுடைய தொகுதியில் இருக்கும் கிழக்கு அபிராமபுரத்தைப் பற்றிச் சாத்தான்குளம் உறுப்பினர் அதிக அக்கறை இந்த விஷயத்தில் காட்டுகின்ற காரணத்தால் அவரைப் பொதுஜன அதிகாரியாக நியமிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

Thiru K. VINAYAKAM : Any hon. Member who has been elected to this House can ask any question pertaining to any part of the State. For instance, I can ask a question about a matter concerning Kalignar's constituency.